பிறந்த மண்ணில் விடியலுக்குள் வீழ்ந்த உறவு
மக்கள் இருந்த இடம் மறைந்த பின்னும் வாழும் உறவு 2

திசை தெரியாது நிலை தெரியாது
நாளை இவர்கள் வாழ வழி தெரியாது 2

கண்ணீரும் சென்னீரும் உறைந்து உருகி ஓடும்
கால் வயிற்று கஞ்சியிலே உயிர்கள் ஊசல் ஆடும்
தாய் முகத்தை பாத்தபடி பிள்ளை கண்ணை மூடும்
தாலாட்டு தடுமாறி குரல் ஒப்பாரியாகும்
சொந்தக்காணி நிலமிருந்தும் சொந்தம் இல்லை இன்று
சொந்தங்கள் பலரிருந்தும் சொந்தம் இன்றி போனோம் 2

தேடித்தேடி இழம் தளிரை எதிரி கொண்டு பிடிப்பான் அதை
தேர்ந்தெடுத்து மறுகணமே பிணமாக்கி முடிப்பான் 2
பொழுது படும் நேரத்திலே அவலக்குரல் கேக்கும்
பொல்லாத இரவு வந்தால் ரத்தவாடை மணக்கும்
சொந்தக்காணி நிலமிருந்தும் சொந்தம் இல்லை இன்று
சொந்தங்கள் பலரிருந்தும் சொந்தம் இன்றி போனோம் 2